# இயேசுவின் மரணத்திற்கு நாம் எவ்வாறு பதில்செயல் செய்ய வேண்டும்?

## இயான் டெர்ரி

*இந்தப் புத்தகத்தை வாசித்ததில், ஒருவேளை நமது இருதயங்கள், தேவனும் இயேசுவும் மனிதகுலத்தின்மீது கொண்டுள்ள மதிப்பிட இயலாத அன்பினால் தொடப்பட்டிருக்கலாம். நாம் இப்படிப்பட்ட விலையுயர்ந்த பலியை அவசியப்படுத்தும் மனிதகுலத்தின் பாவத்தினுடைய பயங்கரத்தன்மையினால் மனம் ஈர்க்கப்பட்டு இருக்கலாம். நம்மை மிகவும் அதிகமாக அன்புகூருகிற மற்றும் நித்தியம் முழுமைக்கும் தமது அளவற்ற ஆசீர்வாதங்களை நம்மீது பொழிய விரும்புகிற தேவனுடன் ஒரு இசைவிணக்கமான உறவைக்கொண்டிருக்க நாம் விரும்பலாம் என்பது நிச்சயம்.*

*அப்படியென்றால் சிலுவையின் மூலமாக இயேசு நமக்குக் கிடைக்கும்படி செய்துள்ள இரட்சிப்பையும் மன்னிப்பையும் நாம் எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்? இயேசு பெரும்வேதனைப்பட்டு, நமக்கு அளிக்கும்படி ஏற்படுத்தின நித்தியஜீவனை நாம் எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்?*

*பின்வரும் கேள்விகளை நாம் ஆழ்ந்து சிந்திப்போமாக. இவை தொடர்பான வேதவசனங்களை நாம் வாசிக்கையில், தேவன்தாமே தமது வசனத்தின் மூலமாக நமக்குப் பதில்களைக் கொடுப்பார். இந்தப் பாடத்தின் முடிவில் உங்கள் பதில்செயல் என்னவாக இருக்கும்?*

*1. இயேசு அளிப்பதற்கென்று மரித்ததான மன்னிப்பு மக்களுக்கு ஏன் தேவைப்படுகிறது? (ரோமர் 3:9-18, 23)* ____________________

____________________

*இது உங்களை உள்ளடக்குகிறதா?* ____________________

____________________

*2. இயேசு கொடுக்க வந்த மன்னிப்பையும் நித்தியஜீவனையும் பெற்றுக்கொள்ள நாம் முதலில் என்ன செய்ய வேண்டும்? (யோவான் 3:16, 17; 8:24)* ____________________

____________________

*இயேசு யாராக இருக்கிறார் என்று நாம் விசுவாசிக்க வேண்டும்?*

*(மத்தேயு 1:18-25)*__________
*இயேசுவில் விசுவாசம் கொள்ளுதல் ஏன் இவ்வளவு முக்கியமான தாக உள்ளது? (யோவான் 14:6; நடபடிகள் 4:12)*__________

---

*இயேசு, நாம் மன்னிக்கப்பட்டிருப்பதற்குச் சாத்தியமான எதைச் செய்தார் என்று நாம் விசுவாசிக்க வேண்டும்? (மத்தேயு 20:28; ரோமர் 5:8, 9)*__________
*நீங்கள் இயேசுவில் விசுவாசம் கொள்ளுகிறீர்களா?*__________

3. *இயேசுவுக்கு நமது பதில்செயலில் அடுத்துள்ள கூறு என்ன? (நடபடிகள் 17:30; 26:20)*__________
*மனந்திரும்புதல் என்றால் என்ன? அது ஏன் அத்தியாவசியமானதாக உள்ளது? (நடபடிகள் 3:19; லூக்கா 13:3)*__________
*மனந்திரும்புதலை ஊக்கப்படுத்தும் ஆழ்ந்த சிந்தனைகள் யாவை? (ரோமர் 2:4; 2 தெசலோனிக்கேயர் 1:7-9; 1 பேதுரு 1:18, 19)*

---

*இயேசுவைச் சிலுவையில் அறைந்த பாவத்திற்கு நீங்கள் உங்கள் முதுகைக் காண்பித்து அவரைப் பின்பற்றவிருக்கிறீர்களா?*

---

4. *இயேசுவின் மன்னிப்பை ஏற்றுக்கொள்வதில் உள்ள மூன்றாம் படிநிலை என்ன? (ரோமர் 10:9, 10)*__________

---

*இயேசுவை ஒப்புக்கொள்வதும் அவருக்கு நமது பற்றுறுதியைத் தருவதும் அவ்வளவு முக்கியமானவைகளாக இருப்பது ஏன்? (மத்தேயு 10:32, 33; 1 தீமோத்தேயு 6:12, 13)*__________

---

*கிறிஸ்துவில் நீங்கள் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிடத் தயாராக இருக்கிறீர்களா?*__________

---

5. *நமது பாவங்கள் மன்னிக்கப்படுகிற மற்றும் நாம் இரட்சிக்கப் படுகிறதான, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றில் உள்ள கடைசிச் செயல்முறை என்ன? (மாற்கு 16:16; நடபடிகள் 2:38)*

---

*ஞானஸ்நானத்தின் நோக்கத்தை வேதாகமம் எவ்வாறு விளக்கப் படுத்துகிறது (நடபடிகள் 22:16)*__________

---

*தெளித்தல், ஊற்றுதல், அல்லது முழுக்காட்டுதல் இவற்றில் வேதாகம ஞானஸ்நானமாக இருப்பது எது? (நடபடிகள் 8:35-39; ரோமர் 6:3, 4)*__________

---

*இயேசுவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதல் ஆகியவற்றுடன் ஞானஸ்நானம் எவ்வாறு உறவுபடுகிறது? (ரோமர் 6:3-11)*

---

## உங்கள் பதில்செயல்

*இரட்சிப்பு மற்றும் மன்னிப்பு ஆகியவற்றை இயேசுவுக்குள் பெறுவது எவ்வாறு என்பதை இப்போது தேவன் தமது வசனத்தின் மூலமாக உங்களுக்குக் காண்பித்துள்ளார், நீங்கள் பாவத்திற்கு உங்கள் முதுகைக் காண்பித்து அவரைப் பின்பற்றத் தயாராக இருக்கிறீர்களா?*

*அவரைக் கர்த்தரென்று ஒப்புக்கொள்ளவும், உங்கள் பாவமன்னிப்புக் கென்று அவரது இரட்சிப்பின் செயலின் சாயலாக, ஞானஸ்நானத்தின் மூலமாக அவருடன் அடக்கம்பண்ணப்படவும் உயிர்ப்பிக்கப்படவும் நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?*